DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 341 / 2022
Deposition of PW1/ LW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.செல்லத்துரை |
| Father's / Husband Name | : | ஆண்டார் |
| Village | : | ஆவுடையார்புரம், சங்கரன்கோவில் |
| Taluk | : | சங்கரன்கோவில் |
| Calling | : | வனக்காப்பாளர் |
| Religion | : | இந்து |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24.06.2025.

1 ம், 14 ம், 15 ம் எதிரிகள் ஆஜர் . மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை . BNSS பிரிவு 355 ன் படியான மனு அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1.) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கடையநல்லூர் வனச்சரகத்தில் வெள்ளக்கல்தேரி பீட்டில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2022 ம் தேதி மேகமலை வனச்சரக வனச்சோதனைச் சாவடியில் வனக்காவலராக நான் பணியில் இருந்த போது சுமார் காலை 6.30 மணியளவில் அரசு பேருந்து வெள்ளி மலை நோக்கி வந்த போது வனச்சோதனை சாவடியில் சோதனை செய்த போது வெளி நபர்கள் (சுமார் 30 பேர் )உள்ளே செல்ல அனுமதி இல்லை என்று நான் சொன்ன போது அவர்கள் பேருந்தில் இருந்து இறங்கி என்னுடன் வாக்குவாதம் செய்தனர்.

2.) செக்போஸ்ட்டை உடைத்தார்கள். என்னை தகாத தேவிடியா மக்கா என்ன வேலை பார்க்கிறீர்கள் , என்ன புடுங்குறிங்க, இங்க எதற்காக செக்போஸ்ட் போட்டு இருக்கிங்க வார்த்தைகளால் திட்டினார்கள். என்னை தவமணி, ராஜாங்கம், தினேஷ்குமார் ஆகியோர் கைகளால் என் நெஞ்சில் குத்தினார்கள். தவமணி என்பவர் என் கையில் இருந்த செல்போனை பிடுங்கி ரோட்டில் போட்டு உடைத்தார். ஒச்சம்மாள் என்பவர் அவர் காலில் இருந்த செருப்பை கழற்றி என் தலையிலும், முகத்திலும் அடித்தார். பிறகு அருகில் இருந்த நபர்கள் சண்டை போடாதீர்கள் என்று கூறினார்கள். அருகே வனக்குடியிருப்பில் இருந்த அருண் என்பவர் எங்களது வனச்சரக

அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தார். நான் மயிலாடும்பாறை காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். **புகார் மனு அ.சா.ஆ.1.** பின்னர் சிகிச்சைக்காக தேனி க.விலக்கு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு ஒரு வார காலம் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.) நான் மேற்படி வனப்பகுதியில் 23.01.2020 – 2023 ம் வருடம் மார்ச் மாதம் வரை வனக்காப்பாளாராக பணியாற்றி வருகிறேன். அரசு பேருந்தில் சுமார் 30 க்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்து வந்தார்கள். நான் வெளிநபர்களை பேருந்தில் இருந்து இறக்கிவிடும்படி சொன்ன விபரத்தை எனது புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பேருந்தில் பயணம் செய்த மேற்படி நபர்கள் எந்தெந்த ஊரினைச் சேர்ந்தவர்கள் என்றால் கோரையூத்து, அரசரடி, மஞ்சனூத்து, வெள்ளிமலை மற்றும் அதை சுற்றியுள்ள ஊரினைச் சேர்ந்தவர்கள்.

2.) மேற்படி பேருந்தானது தேனியில் இருந்து வெள்ளிமலை வரை செல்லும் அரசுப் பேருந்தாகும். மேற்படி பேருந்து 1985 ம் ஆண்டில் இருந்து இன்று வரை சுமார் 40 ஆண்டுகளாக பொதுமக்களை ஏற்றிச் சென்று வருகிறது என்றால் சரிதான். வெளிநபர்கள் மேற்படி அந்த பேருந்தில் வெள்ளிமலைக்கு அனுமதி பெறாமல் செல்ல முடியாது என்று எழுத்து பூர்வமான உத்தரவு எதுவும் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அனுமதி பெற்ற பின் செல்ல வேண்டும் என எனக்கு மேல்அதிகாரியால் உத்தரவு வாய்மொழியாக பிறப்பிக்கப்பட்டது.

3.) பேருந்தின் டிரைவர் மற்றும் கண்டக்டரிடம் பேருந்தில் இருக்கும் வெளிநபர்களை இறக்கிவிடும்படி நான் கூறினேனா என்றால் அனுமதி பெற்று உள்ளே செல்லுமாறு கூறினேன். அவ்வாறு அனுமதி பெறாத நபர்களை உள்ளே அனுமதிக்க நான் மறுத்தேன் என்றால் சரிதான். வெளி நபர்கள் அனுமதி பெற்றுத்தான் உள்ளே செல்ல வேண்டும் விபரத்தினை புகாரிலும் , போலீசாரின் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் யார் யார் என்னை என்ன வார்த்தைகள் சொல்லி பேசினார்கள் என்ற விபரத்தினை புகாரில் , சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் .

4.) நான் முதல் விசாரணையில் சொன்ன 4 எதிரிகள் என்னை கையால் அடித்த விபரத்தை எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . சம்பவத்தின் போது எதிரி தவமணி என் போனை பிடுங்கி கீழே எறிந்து உடைத்து விட்டார் என்ற விஷயத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . ஒச்சம்மாள் என்னை செருப்பால் அடித்த

விபரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் யார் என்ற பெயர் விபரத்தை சொல்லவில்லை.

5.) சண்டைய யார் யார் விலக்கிவிட்டார்கள் என்றால் பேருந்தில் இருந்த நபர்கள் அங்கு இருந்தார்கள் வேறு யாரும் வரவில்லை. நான் சொல்லவது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பேருந்தில் இருந்த நபர்கள் கோரையூத்தினை சேர்ந்த நபர்கள் என்றால் கோரையூத்து, அரசரடி, மஞ்சனூத்து, வெள்ளிமலை, பொம்மராஜபுரம் ஊரினைச் சேர்ந்தவர்கள். கோரையூத்தில் இருந்து மஞ்சனூத்து செக்போஸ்ட் சுமார் 2 கி.மீ. தள்ளி உள்ளது என்று சொன்னால் சரிதான். அங்கிருந்து அரசரடி சுமார் 12 கி.மீ. தொலைவு இருக்கும். அரசரடியில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் வெள்ளிமலை உள்ளது.

6.) மேற்படி அரசரடி பகுதியில் சுமார் 100 –150 குடும்பங்கள் விவசாயத்தை நம்பி வாழும் குடும்பங்கள் உள்ளதா என்றால் அது வனப்பகுதிக்குள் உள்ளது. மேற்படி பகுதியில் 80 ஆண்டுகளுக்கு மேலாக குடிபெயர்ந்து விவசாயத்தை தொழிலாக செய்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தன்று கோரையூத்தை சேர்ந்த இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் விவசாய வேலைக்காக அரசரடிக்கு சென்றதை நான் தடுத்ததாக சொன்னால் நான் அனுமதி பெற்று அவர்களை செல்லும்படி அறிவுறுத்தினேன்.

7.) பேருந்தின் டிரைவர் மற்றும் கண்டக்டரிடம் பேருந்தில் இருக்கும் நபர்களை உள்ளே செல்ல அனுமதிக்காமல், அவர்களை இறக்கிவிடும்படி நான் கூறினேன் என்று சொன்னால் சரியல்ல. பேருந்தின் டிரைவர் மற்றும் கண்டக்டர் பயணிகள் கட்டணம் செலுத்தி பயணச்சீட்டு பெற்றுள்ளதால் அவர்களை இறக்க முடியாது என்று கூறினார்கள் என்று சொன்னால் சரியல்ல ஆகையால் நான் பேருந்தில் ஏறி ஒவ்வொருவரையும் கீழே இறங்குமாறு மிரட்டினேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு பயணிகள் இறங்கும் சமயத்தில் எதிரி ஒச்சம்மாள் என்பவரை நான் படிக்கட்டில் இருந்து கீழே தள்ளவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு நான் கீழே தள்ளிவிட்டதால் தான் மேற்படி பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த பிரச்சனையை சமாதானம் செய்ய தான் மற்ற எதிரிகள் வந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை கேள்விபட்டு, ஆண்டிபட்டி காவல் துறை துணைகண்காணிப்பாளர், கடமலைக்குண்டு ஆய்வாளர், ஆண்டிபட்டி ஆய்வாளர் , தேனி FRO ஆகியோர் சம்பவயிடம் வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன்.

8.) எனக்கு சிகிச்சை செய்த மருத்துவரிடம் யார் யார் என்னை தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். யார் யார் குறிப்பிட்டு என்னை தாக்கினார்கள் என்ற விபரத்தை புகாரில்

சொல்லியுள்ளோனா என்றால் சொல்லியுள்ளேன். கோரையூத்தைச் சேர்ந்த எங்கள் வனத்துறையில் காண்ட்ரேக்ட் வேலை செய்யும் இராஜேஸ் என்பவரை எனக்கு தெரியும். மேற்படி எதிரிகள் 27 நபர்களின் பெயர், த.பெ. விலாசம் ஆகியவற்றை புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் CC TV footage யை பார்த்து சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த போது கூறினேன். நான் சொல்வது போல சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் தான் இந்த பிரச்சனைக்கு காரணம் என்றால் சரியல்ல. நான் சம்பவ பிரச்சனையில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. சம்பவதன்று நான் தான் எதிரி ஒச்சம்மாளை செருப்பை எடுத்து தாக்கினேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.06.24 16:19:16 +0530

Judicial Magistrate,
Andipatti.